# *"குழந்தைகளை இந்த சமூகம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்"*



**பொதிகை தொலைக்காட்சி வழங்கிய நேர்காணல் நிகழ்ச்சி**

***நாள்: ஜனவரி 6, 2019***

***சிறப்பு விருந்தினர்: திருமதி.வித்யா சங்கர் அவர்கள்***

***(குழந்தை ஆளுமை ஆய்வாளர் & தலைவர் - ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)***

***நேர்முக ஒருங்கிணைப்பு: அரவிந்த் பாரதி***

***நேரம்: 30 நிமிடங்கள்***

குழந்தைகளின் முழு ஆளுமை வளர்ச்சித் தொடர்பான ஆய்வுகளில், கடந்த பல்லாண்டுகளாக ஈடுபட்டு வரும் ரிலீஃப் ஃபவுண்டேஷன் அமைப்பின் நிறுவனரும், பிரபல

*சமூக செயல்பாட்டாளருமான திருமதி.வித்யா சங்கர் அவர்கள், பொதிகை தொலைக்காட்சியில், முறையான குழந்தை வளர்ப்பு, அவர்களைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் சிறார் குற்றவாளிகளை சீர்திருத்தல் போன்ற பல்வேறான அம்சங்களில், தனது ஆய்வனுபவ கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நேர்காணல் இங்கே உங்களுக்காக...!*

*1.* ***<u>கேள்வி:</u>*** *எல்லோரும் சொல்வார்கள். காலம் மிகவும் மாறிவிட்டது, முன்பு மாதிரி இல்லை; முன்பெல்லாம் மிகவும் நன்றாக இருந்தது என்று கூறுவார்கள். எனவே, அந்த இடத்திலிருந்தே துவங்குகிறேன். நீங்கள் கடந்த 25 ஆண்டுகளாக இந்த சமூகத்தில் பல பணிகளை ஆற்றியுள்ளீர்கள்! அந்த வகையில், கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் இருந்த சமூக நிலைமைக்கும், தற்போதைய சமூக நிலைமைக்கும் உள்ள மிகப்பெரிய மாற்றமாய் நீங்கள் காணக்கூடியது என்ன?*

***<u>பதில்:</u>*** *முக்கியமாகப் பார்த்தால், குழந்தைகளின் வாழ்க்கைத் தரம். இந்த வாழ்க்கைத் தரம் என்ற பதத்தை, பொருட்களின் பயன்பாடு என்ற அடிப்படையில் வைத்து நாம் மதிப்பிட்டோம் என்றால், நிச்சயமாக, அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் குழந்தைகளின் வாழ்க்கைத்தரம் மிகவும் மேம்பட்டுள்ளது. ஏனெனில், சாதாரணமாக ஒரு ஃபோன் செய்தாலே, குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கே அனைத்தும்*

வந்துவிடுகிறது. ஆனால், அதை நாம் ஒரு வாழ்க்கை மேம்பாடாக நினைக்கத் தேவையில்லை. மாறாக, பாசம், பந்தம் மற்றும் ஒழுக்கம் போன்ற அத்தியாவசிய வாழ்க்கைப் பண்புகள், குழந்தைகளின் வாழ்விற்கு, எடுத்துக்காட்டாக இல்லாத சூழல் உள்ளது. குழந்தைகளுக்கு எது நல்லது - கெட்டது என தெரிந்திருந்தும், அதை செயல்படுத்துகிற அளவிற்கு விழிப்புணர்ச்சி இருப்பதில்லை. இதற்கெல்லாம் பல காரணங்கள் உள்ளன. இந்த சமூகத்திற்கு, குழந்தைகளை எப்படி நடத்த வேண்டுமென தெரியாதது ஒரு பெரிய குறைபாடு. சமூகத்தில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் குடும்பத்தார்களே! பெற்றோர்களுக்கு, குழந்தை வளர்ப்பு பற்றி, அவர்களின் முக்கியத்துவம் பற்றி மற்றும் குழந்தைகளுடைய உரிமைகள் குறித்து பலவும் தெரியாத ஒரு துரதிஷ்டவசமான சூழல் நிலவுகிறது. இதனால், குழந்தைகள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். செல்வந்தக் குழந்தைகளாகட்டும், ஏழ்மையிலிருக்கும் குழந்தைகளாகட்டும், அனைத்து தரப்பு குழந்தைகளுமே பாதிக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த மோசமான நிலைமை கடந்த 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் இல்லை. இப்போதோ, நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. குடும்பத்திற்குள்ளேயே, குழந்தைகளுக்கான பல்வேறு

கொடுமைகள் நிகழும் சூழல் உள்ளது. ஆனால், இந்த துர்பாக்கிய நிலையை மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ள யாரும் முன்வருவதில்லை என்பதுதான் பெரிய சோகம்.

*2. __கேள்வி:__* இத்தகைய முயற்சிகளைப் பற்றி கூறுகிறீர்கள். இப்படிப் பார்க்கையில், சமூகத்தில் இருக்கும் பலதரப்பட்ட குழந்தைகளைப் பற்றி யோசிக்க வேண்டியுள்ளது. ஒருபக்கம் பார்த்தால், பெற்றோர்களால் கடுமையாக நடத்தப்படும் அல்லது எந்தவித கவனிப்புமின்றி விடப்படும் குழந்தைகள்; இவர்கள் சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடும் வகையினராக மாறுவதை நாம் காண்கிறோம். மற்றொரு பக்கம் பார்த்தால், மிகவும் அதீத கவனம் செலுத்தப்படக்கூடியவர்கள். அதாவது, நிறைய செல்லம் மட்டுமல்லாது செலவுகளும் இருக்கும். இந்தவகை குழந்தைகளும் ஆபத்தில்தான் இருக்கிறார்கள். இந்த இருவகையினரையும் நீங்கள் எப்படி அணுகுகிறீர்கள்? இவர்கள் சமூகத்தின் பார்வையில் இருக்கிறார்களா?

__பதில்:__ நீங்கள் உலகளவில் எடுத்துக்கொண்டாலும் சரி, குழந்தைகளைப் பொறுத்தவரை, பிரதான தேவைகள் இரண்டுதான். நம்முடைய தினசரி வாழ்க்கையில் நாம்

நினைப்பது என்னவென்றால், குழந்தைகள் என்பவர்கள் அதிக சேட்டை செய்பவர்கள் மற்றும் தேவையற்ற குறும்புத்தனங்களைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் பிடிவாதமானவர்களும்கூட என்ற கருத்தாக்கம்தான். அது நம்மில் ஆழமாக இருக்கிறதே ஒழிய, அதன் பின்னணியை யோசித்துப் பார்ப்பதற்கு நம் யாருக்கும் நேரமிருப்பதில்லை. நிலைமை இப்படியிருக்கையில், இந்த 2 வகையைச் சேர்ந்த குழந்தைகளும் ஒரே பிரச்சினையில் இருப்பவர்கள்தான். இவர்களால் சமூகத்தில் எதிர்காலத்தில் பிரச்சினைகள்தான் உருவாகுமே ஒழிய, இவர்களிடமிருந்து ஆக்கப்பூர்வ பங்களிப்பை எதிர்பார்ப்பது மிகவும் கடினம். குழந்தைகள் குறித்த கண்ணோட்டத்தை, பெரியவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். நான் இத்தனை ஆண்டுகளில் சமூகத்தில் சந்தித்த ஆயிரக்கணக்கான குழந்தைகளை ஆய்வு செய்தபோது நான் அறிந்துகொண்டது என்னவெனில், அந்தக் குழந்தைகள் அனைவரும் தங்களுக்குத் தேவையான சரியான கல்வி குறித்தோ அல்லது முக்கியத்துவம் குறித்தோ, தேவையான அல்லது முறையான கவனம் செலுத்தப்படாதவர்களாகவே இருப்பதை அறிய முடிந்தது. இதனால், அவர்கள் வழிதவறுவதும் எளிதான ஒன்றாக உள்ளது.

இன்றைய சிக்கல்களில் முக்கியமான ஒன்று தொலைக்காட்சி. எந்த வயதில், குழந்தைகளுக்கு தொலைக்காட்சி காண்பிக்கப்பட வேண்டுமென்ற

விழிப்புணர்வு இல்லாமல், தாங்கள் எப்போதும் சார்ந்திருக்கும் அதன்பால், பொருத்தமற்ற வயதில் இருக்கும் தங்கள் குழந்தைகளையும் பாதிப்படையச் செய்கின்றனர் பெற்றோர்கள். சிறார் நீதிமன்ற நீதிபதியாக இருந்த அனுபவத்தில் நான் பார்த்த பல பாதிக்கப்பட்ட குழந்தைகளில் (பல்வேறுவிதமான சுரண்டல்களுக்கு ஆளானவர்கள், வீட்டைவிட்டு வெளியேறியவர்கள் உட்பட), செல்வந்த வீட்டுப் பிள்ளைகள் உட்பட, அவர்களின் அந்த நிலைமைக்கு காரணம் என்னவென்று ஆராய்ந்தால், அவர்களின் வீட்டுச் சூழல் மற்றும் வீட்டுப் பெரியவர்களின் குற்றங்களாகத்தான் இருக்கின்றன.

*3.* ***<u>கேள்வி:</u>*** இத்தகைய ஒரு இக்கட்டான சூழலில், முறையான குழந்தை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கட்டாயம் தேவைப்படுகிறது. நிலைமை இப்படியிருக்கையில், பல பெற்றோர்களோ, என் பிள்ளைக்கு அருமையாக மொபைல் இயக்கத் தெரியும், அவனுக்கு (அல்லது) அவளுக்கு வீடியோ பதிவேற்றம் செய்யத் தெரியும் மற்றும் சமூக வலைதளங்களில் கணக்கும் உள்ளது என்பதைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். எனவே, அந்தப் பெற்றோர்கள் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென நினைக்கிறீர்கள்?

**பதில்:** இந்த உலக உயிரினங்களிலேயே, மனித இனத்திற்கு மட்டும்தான், குழந்தை வளர்ப்பு குறித்து சொல்லித்தர வேண்டிய சூழல் உள்ளது! ஆனால், பிற உயிரினங்களுக்கு, பிள்ளை வளர்ப்பு குறித்து தெளிவான அறிவு உள்ளது. ஆனால், மனிதர்கள் இந்த விஷயங்களில் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்கிறார்கள். தங்களின் இளம் குழந்தையை, வீட்டுப் பெரியவர்களிடம் கவலையின்றி விட்டுவிட்டு பணிக்குச் சென்று விடுகிறார்கள். குழந்தை கவனிப்பு மையங்களில் (Day care centers) விட்டுவிட்டு, வேலைக்குச் செல்கிறார்கள்.

இப்படியெல்லாம் செய்வது சரியானதா? குழந்தை வளர்ப்பு என்றால் என்ன? வார இறுதிநாட்களில் மட்டும்தான் குழந்தைகள் தேவைப்படுகின்றனரா? இவற்றையெல்லாம் பார்க்கையில், மனதில் வருத்தம் மேலிடுகிறது. இதுபோன்ற நீண்டநேரப் பிரிவுகளை சந்திக்கும் குழந்தைகள், பின்னாளில் தங்களுடைய பெற்றோர்களுடன் ஒட்டி உறவாடும் வாய்ப்பு மிகவும் குறைவே. மேலும், முக்கியமான காலகட்டத்தில், தங்களின் பெற்றோர், தம்மிடம் இல்லாதுபோவது அவர்களின் உள்ளத்தில் பெரிய பாதிப்புகளை உண்டாக்குகிறது. பின்னாளில் அக்குழந்தைகள் பெரியவர்கள் ஆகும்போது, தங்களின் பெற்றோர்களைப் பார்த்து, "எனக்காக நீங்கள் செய்தது என்ன?" என்று வெளிப்படையாக கேட்டும் விடுகின்றனர்.

அத்தகைய பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள், ஒரு நல்ல குடும்ப அமைப்பை உருவாக்குவதிலும் மிகுந்த சிரமங்களை சந்திக்கின்றனர். அதிக விவாகரத்துகளும் நிகழ்கின்றன. மேலும், பணத்தை எப்படி பயனுள்ள முறையில் செலவு செய்வது என்பதற்கும், அவர்களுக்கான முன்மாதிரிகள் இருப்பதில்லை. தேவையான முன்மாதிரிகள் (role models) இல்லாத ஒரு வெற்றுச் சூழலில் குழந்தைகள் வளர்வது ஒரு ஆபத்தான நிலை! இன்றைய நமது வாழ்க்கைச் சூழலில், குழந்தைகளை ஈர்க்கத்தக்க நிறைய சக்திகள் உள்ளன. பெற்றோர்களுடைய சக்தியைவிட, அத்தகைய ஈர்ப்பு சக்திகள் வலுவாக செயலாற்றுகிறபோது, பெற்றோர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியாத நிலைதான் உண்டாகிறது!

*4.* ***<u>கேள்வி:</u>*** குழந்தைகள் தூங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச அளவான 8 முதல் 9 மணிநேரங்கள் தவிர்த்து, மீதியுள்ள 15 முதல் 16 மணிநேரங்கள் அவர்களின் செயல்பாட்டு நேரமாகும். இந்த மொத்த செயல்பாட்டு நேரத்தில், 8 மணி நேரங்கள் வரை, அவர்களின் பள்ளி சார்ந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மீதியுள்ள மணிநேரங்களில், அவர்களின் குடும்ப கலப்பு, படிப்பு, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு உள்ளிட்டவை

இடம்பெறுகின்றன. ஆக, மேற்கண்ட இரண்டுவிதமான செயல்பாட்டுக் களங்களில், குழந்தைகள் சந்திக்கும் சிக்கல்கள் எவை? மற்றும் அதை மாற்றியமைக்க நீங்கள் செய்யப்போகும் பணிகள் யாவை?

**<u>பதில்:</u>** இன்றைய வீட்டுச் சூழலை எடுத்துக்கொண்டால், குறிப்பாக பெற்றோர்களுக்கு, நேரமின்மை என்பது ஒரு பெரிய குறைபாடாக இருக்கிறது. பல வீடுகளில், பெற்றோர்கள் இருவருமே பணிக்குச் செல்லும் சூழல் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அதேசமயம், ஒருவர் மட்டுமே பணிக்குச் செல்லக்கூடிய இல்லங்களில்கூட, குழந்தை வளர்ப்பு குறித்த நுட்பங்களையும் ஆலோசனைகளையும் அறிந்துகொள்ளத்தக்க மனப்பக்குவம் இருக்கிறதா? என்பது ஒரு கேள்வி மற்றும் அதுகுறித்த தகவல் இருக்கிறதா? என்பது மற்றொரு கேள்வி. இப்படியிருக்கின்ற ஒரு நிலையில், குழந்தையானது சற்று வளர்ந்தவுடன், குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பது போன்ற தமது மேலோட்டமான கடமைகள் குறித்துதான் பல பெற்றோர்கள் சிந்திக்கிறார்கள். குழந்தைகளை சேர்க்கும் பள்ளியில் எந்தளவிற்கு உருப்படியான பயன்களைத் தரக்கூடிய சூழல் இருக்கிறது மற்றும் பாதுகாப்பு இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் அதிகம் யோசிப்பதில்லை. இன்றையப் பள்ளிகளில் பல, 500 முதல்

1000 குழந்தைகளுக்கு மேல் படிக்கின்ற ஒரு நெருக்கடியான இடங்களாக இருக்கின்றன. அந்தவகையில், அங்கே, குழந்தைக்கான பாதுகாப்பு என்பது முக்கிய அம்சமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

பெற்றோர்கள் அதிக கவனம் கொடுத்து, குழந்தைகளை கவனித்து உள்வாங்க வேண்டும். நல்லது - கெட்டது எவை என்பதை வாயால் சொல்லி அறியவைப்பது என்பதைவிட, நாமே எடுத்துக்காட்டாக இருப்பதே தேவையான ஒன்று.

இன்றைய நிலையில், பல பள்ளிகள், வியாபார நோக்குடன் செயல்பட்டுவரும் நிலையே உள்ளது. அனைத்துப் பள்ளிகளுமே அப்படித்தான் என்பது என் கருத்தல்ல. இருப்பினும், அந்தப் பள்ளிகளில் குழந்தைகளின் உண்மையான வளர்ச்சிக்கு ஏதுவான கல்வியை அளிக்கிறார்களா? என்பதையும், அந்தக் கல்வியானது எந்தளவிற்கு வாழ்க்கையோடு இணைந்ததாக உள்ளது என்பதையும் கட்டாயம் பார்க்க வேண்டியுள்ளது. “கல்வி என்பது வெறுமனே பள்ளியோடு தொடர்புடையதல்ல; அது மனிதனின் முழு வாழ்வுக்கும் தொடர்புடையது மற்றும் மனிதனை அனைத்திற்கும் தயார்படுத்தக்கூடிய ஒன்றாக இருப்பதுதான்’’ என்று மகாத்மா காந்தியே கூறியிருக்கிறார். அப்படியிருக்கையில், ஒரு மனிதனை முழுஅளவில் தயார்படுத்தும் கடுமையான பணியை, வெறும் 7 முதல் 8 மணிநேரங்களுக்குள் பள்ளிகள் மட்டுமே

செய்துவிடக்கூடியதா? அல்லது அதை குழந்தை சார்ந்த அனைத்துப் பொறுப்பாளர்களும் சேர்ந்து செயல்படுத்துகிறார்களா? என்று பார்க்கையில், வீடுகளிலும் பள்ளிகளிலும், அதற்கான பொறுமையின்றி, எல்லாம் அவசரகதியாகவே இருக்கும் நிலையை நாம் காணலாம். மணி அடித்தால் உடனே அடுத்த பாடம், மணியடித்தால் அனைத்தையும் விட்டுவிட்டு ஓடுவது என்பது போன்ற சூழலில், பொறுமையான ஆக்கப்பூர்வ சிந்தனைக்கு இடமில்லை மற்றும் குழந்தைகள் தங்களுடைய மனங்களில் நிரம்பியிருக்கும் சந்தேகம் மற்றும் அச்சம் ஆகியவை குறித்து தெளிவு பெறுகின்ற வாய்ப்புகளும் இல்லாமல் போகிறது.

**5. <u>கேள்வி:</u>** இரண்டு முக்கியமான சவால்களைப் பற்றி கூறியுள்ளீர்கள். அதாவது, அந்த அவசர நிலை இருக்கக்கூடிய இடங்கள். பள்ளிக்கூடம் மற்றும் பொது இடங்கள். உதாரணமாக, போக்குவரத்து நெரிசல் மற்றும் பொது நிகழ்ச்சிகள். இவற்றை எப்படி மென்மையாக கொண்டுசெல்வது, வாழ்க்கையை எப்படி இலகுவாக ஆக்குவது? அதற்கான பணிகள் இப்போது என்ன நடந்துகொண்டுள்ளன?

**பதில்:** இப்போது நிறைய பள்ளிக்கூடங்கள் முயற்சிகளைத் தொடங்கியுள்ளார்கள். தேர்வுகளின் எண்ணிக்கையையும் குறைத்துள்ளார்கள். இது வெறும் எழுத்துப்பூர்வமாக மட்டுமே இருக்கிறதா? அல்லது செயல்பாட்டிலும் வந்துள்ளதா? என்பதையும் நாம் பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கான வீட்டுப் பாடங்களை சில பள்ளிகள் குறைத்துள்ளதாக கேள்விப்படுகிறேன். ஆனால், இந்த வீட்டுப் பாடம் என்பது வீட்டு நடவடிக்கைகள் அடிப்படையிலான பாடங்களாக மாற வேண்டும் (from home work to home based work). குழந்தைகளுக்கு, வீட்டுச் சூழல்களிலுள்ள வேலைகளை செய்யத் தெரிய வேண்டும். இன்றைக்கு 30 வயது நிலையிலுள்ளவர்களில் பலருக்கு, அரிசி வைத்து சோறு சமைக்கத் தெரிவதில்லை. அதை வெளியில் போய் சாப்பிட்டுக் கொள்ளலாமே என்று சொன்னால், அது ஒரு தனி விவாதமாகவே மாறக்கூடும். ஆனால், சம்பந்தப்பட்டவர்களுக்கு, அதற்கான திறன் இல்லை என்பதுதான் உண்மையான காரணம்.

குழந்தைகளுக்கு, அவர்களின் வளர்ச்சிக்கேற்ற கல்வி என்பது அவசியம். பொதுவாக, நீரைப் பார்த்தால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், அந்த நீரையே அவர்கள் வெறுக்கும் அளவிற்கு, நாம் அவர்களை அவசர அவசரமாக குளிப்பாட்டி, அவர்களை கிளப்பி, பள்ளிக்கு அனுப்புகிறோம். பள்ளியிலும், நீரில் சற்று சுதந்திரமாக

செயல்பட அவர்களுக்கு கண்டிப்பாக அனுமதி மறுக்கப்படுகிறது. குழந்தைகளின் இதுபோன்ற சின்ன சின்ன ஆசைகளை ஆர்வமுடன் கவனித்து, அவற்றைப் பூர்த்திசெய்ய உதவ யாரும் முன்வராத நிலைமைகளை, தற்போது மாற்றுவதற்கான விழிப்புணர்வு உருவாகியுள்ளது. பல பெற்றோர்கள் மற்றும் எதிர்காலத்தில் அந்த நிலையை அடைய உள்ளோர் பலரும், அதற்கான தனி பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், எங்களது ரிலீஃப் ஃபவுண்டேஷன் நிறுவனம் சார்பாக, நாங்கள் அதுபோன்ற பயிற்சி வகுப்புகளை வழங்கி வருகின்றோம். அவற்றில் கலந்துகொள்ளும் பெற்றோர்கள், ‘தாங்கள் குழந்தைகளிடம் நடந்துகொள்ளும் முறைகளில் நிறைய தவறுகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறோம், அதை தவறு என்று நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம்’ என்று திறந்த மனதுடன் வருகிறார்கள். இந்த நிலை, மாற்றத்திற்கான ஒரு பெரிய அறிகுறி! அதேசமயம், நான் மாறமுடியாது மற்றும் நான் செய்வதில் தவறும் இல்லை என்று சொல்பவர்களிடம் நமக்கு எந்த வேலையுமில்லை.

*6.* **<u>கேள்வி:</u>** இதில் ஒரு முரண்பட்ட மனநிலையும் இருக்கிறது. என் குழந்தை பெரிய போட்டிகளில் கலந்துகொண்டு ஜெயிக்க வேண்டும். அது சமூகத்தில்

அந்தஸ்து பெற வேண்டும். அதற்காகத்தான் இவை அனைத்தையுமே நான் செய்கிறேன் என்ற மனநிலை உடையவர்கள், நீங்கள் சொல்லும் கருத்தை விரோதமாகத்தான் பார்ப்பார்கள். எனவே, அப்படியானவர்களை சரியான வழிக்குக் கொண்டுவர, என்னமாதிரியான முயற்சிகள் தேவை?

**பதில்:** குழந்தைகளின் மனநிலையை நாம் எடுத்துக்கொண்டால், போட்டிகளில் தன்னுடைய சக போட்டியாளர்களைத் தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணமே அவர்களிடம் கிடையாது என்பதுதான் உண்மை. குழந்தை சார்ந்த கல்வியானது கொண்டுவரப்பட வேண்டும். பள்ளி விடுறை என்ற அறிவிப்பு வெளியானதும், 'ஹையா...ஜாலி' என்று சொல்வது, பள்ளி செல்வதற்கு விருப்பமில்லை என்ற கருத்தைத்தான் வெளிப்படுத்துகிறது. ஆனால், அந்த விருப்பமில்லாத இடத்திற்கு, சென்றுதான் ஆகவேண்டுமென வலியுறுத்தப்படுகையில், பெற்றோர்களுடன் அதிகநேரம் செலவிட்டு, அவர்களிடம் இணைந்து செயல்பட்டு, அதன்மூலம் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற இயல்பான எண்ணங்களைக் கொண்ட குழந்தைகள், இந்த வற்புறுத்தலால், ஒருகட்டத்தில், பெற்றோர்களுடன் இருப்பதையே விரும்பாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஏனெனில், எப்போது பார்த்தாலும் அறிவுரை, இதை ஏன்

செய்யவில்லை? அதை ஏன் செய்யவில்லை? என்பது போன்ற குடைச்சல்கள் என எதிர்மறை உறவுநிலையே அங்கே நிலவுகிறது. இவற்றை நேர்மறையாக மாற்றுவதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளை, குழந்தைகள் நிச்சயம் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

**7.** **<u>கேள்வி:</u>** சமீபத்தில்கூட, நான் ஒரு இடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்கள் சொன்னது, 'எங்களுடைய பிரார்த்தனை வழிமுறையில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், 8 மணிக்குமேல் ஃபோன் உள்ளிட்டவைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, 1 மணிநேரத்திற்கு மேல், குடும்ப நேரம் என்ற ஒன்றை செலவிட வேண்டுமென்பதுதான்'. இப்போது நீங்கள் சொல்வதைக் கேட்கையில், எனக்குத் தோன்றுவது என்னவெனில், பெற்றோர்களுக்கு தங்களின் நேரத்தை எப்படி செலவுசெய்ய வேண்டுமென்பது தெரியவில்லை. ஏனெனில், குழந்தைகளுக்கான செயல்பாட்டு நேரம் 15 மணிநேரங்கள் வரை இருக்கையில், பெற்றோர்களுக்கு அது 17 மணிநேரம் என்பதாக இருந்தாலும், அதில் அவர்களுக்கான தனிப்பட்ட நேரம் என்பது குறைவே. எனவே, இப்படியான ஒரு நெருக்கடியில், தற்போது நீங்கள்

குறிப்பிடக்கூடிய Value Parenting என்பதை அவர்கள் செயல்படுத்துவதற்கான சாத்தியங்கள் எப்படியானவை?

**பதில்:** குழந்தைகள் என்பவர்கள், பெற்றோர்களை நம்பியே வந்தவர்கள் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு, தங்களின் பெற்றோர்களைத் தவிர, வேறு முதல்நிலை உறவு என்று யாரும் கிடையாது. அப்படியிருக்கையில், பெற்றோர்கள் தங்களின் கடமைகளை Out source செய்வது முடியாத காரியம். ஆக, அந்த Value Parenting என்பதில் யாருக்கு முதன்மையான பங்களிப்பு இருக்கிறதென்றால், அந்தப் பெற்றோர்களுக்குத்தான். குழந்தைகளும், பெற்றோர்களைத்தான் எதிர்பார்ப்பார்கள். எனவே, இப்படியான ஒரு நிலையில், அந்தக் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்? மற்றும் அவர்களிடம் எப்படி நேரம் செலவழிக்க வேண்டும்? Quality Time என்ற கருத்தாக்கத்தின்படி, தன் குழந்தையிடம் ஒரு பெற்றோர், நான் உன்னிடம் 1 மணிநேரம் மட்டும் செலவழிக்கிறேன். மற்ற நேரங்களில் நீ என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்ற கடுமையான விதிமுறைகளை எல்லாம் வலியுறுத்த முடியாது. குழந்தைகளும் - பெற்றோர்களும் இணைந்து மகிழ்ச்சியாக இருக்கும் ஒவ்வொரு மணித்துளியும் மகிழ்ச்சியானதே! மற்றும் மதிப்புமிக்கதே!

குழந்தைகளை திரும்பிக்கூட பார்க்க முடியாமல், தன் கணினியுடன் வேலையில் ஒன்றிப்போகும் ஒரு தாய், இதை நான் உனக்காகத்தானே செய்கிறேன் என்று சொன்னால், இப்போதைய குழந்தைகள் திருப்பிக் கேட்கிறார்கள், 'நீ இந்த வேலையை யாருக்காக செய்கிறாய்! நிச்சயம் எனக்காக செய்யவில்லை. எனக்காக செய்வதென்றால், இப்போது என்னுடன் வந்து விளையாடு அல்லது நேரம் செலவழி. நான் ஒன்றும் உன்னை கணினி முன்பாக அமரச் சொல்லவில்லையே!' என்று. அப்படி குழந்தைகள் சொல்லும்போது, 'இப்போது உனக்குப் புரியாது' என்பது போன்ற வாக்கியங்களைப் பயன்படுத்தி, குழந்தைகளை எதிர்மறையாக குழப்பிவிட்டு விடுகிறார்கள் பல பெற்றோர்கள்.

எனவே, குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குவதென்பது மிகவும் முக்கியமானது. குறிப்பிட்ட ஒரு மணிநேரம் என்ற நிபந்தனையை தளர்த்திவிட்டு, எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் குழந்தைகள் சொல்வதை காது கொடுத்துக் கேட்டு, தோழமை உணர்ச்சியுடன் அவர்களை அணுக வேண்டும். பெற்றோர்கள் தம்மிடம் வந்து வெறுமனே ஆலோசனைகள் சொல்லும் சந்தர்ப்பங்களை குழந்தைகள் விரும்புவதே இல்லை. அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டும் என்பதைத்தான் விரும்புகிறார்கள்.

**8. <u>கேள்வி:</u>** சமூகத்தில் சில விரும்பத்தகாத வழக்கங்கள் உள்ளன. அதாவது, 'ஓஹ்., இந்தப் பையனா, இவன் எப்போது பார்த்தாலும் சண்டைப் போட்டுக்கொண்டே இருப்பான். 'ஏய்...நீ அப்பவே திருடினவன் ஆச்சே!' போன்ற வாக்கியப் பிரயோகங்கள் அனைத்து வர்க்கங்களுடைய சமூக அமைப்பிலும் உண்டு. இவற்றை நம்பி, தங்களை அப்படியே தகவமைத்துக் கொள்ளும் குழந்தைகளும் இருக்கிறார்கள். எனவே, இப்படியாக பாதிக்கப்படும் குழந்தைகளை எவ்வாறு கையாளலாம்?

**<u>பதில்:</u>** இதுபோன்ற குழந்தைகளுக்கு, அவர்களைச் சுற்றியிருக்கும் பெரியவர்களின் மீது, துளியளவு நம்பிக்கைக்கூட இருக்காது. இதையெல்லாம்தான் நான் மாற்ற முயற்சிக்கிறேன். ஆனால், இதில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, உளவியல்ரீதியாக சேதமடைந்த குழந்தைகளை, மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவர முயற்சிக்கும்போது, அதற்கான நேரம் மற்றும் பணம் அதிகம் செலவாகிறது. குற்றம் புரிந்த பின்னர், ஒரு குழந்தையை சீர்செய்தலென்பது எளிதான ஒன்றல்ல. எனவே, குற்றம் புரிவதற்கு முன்னரே, ஒரு குழந்தையை அதிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால், குழந்தையோடு, பல சரியான நபர்கள் இணைந்து செயல்படுவதற்கான சூழலை உருவாக்குதல் வேண்டும்.

நல்லது - கெட்டது என்பதைப் பற்றி குழந்தைகளுக்கு நன்றாகவேத் தெரியும். அவர்களுக்கு யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. அந்த நல்லது - கெட்டது என்பவைகள் குறித்து குழந்தைகள் செயல்படுத்திப் பார்க்கும் வாய்ப்புகள் அமைய வேண்டும். அதாவது, அவர்கள் நல்ல விஷயங்களை மேற்கொள்கையில் செய்பவை என்ன? மற்றும் கெட்ட விஷயங்களை மேற்கொள்கையில் செய்பவை என்ன? என்பது குறித்து கவனிக்கப்பட வேண்டும். வயதுக்கேற்ற இத்தகைய முயற்சிகளின்போது, நீங்கள் கேள்வியில் கேட்டதுபோன்று, ஒரு குழந்தையை ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டில் அடைத்து, குற்றம் சுமத்தலாகாது. இப்படியாக, ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டில் அவர்களை புகுத்தி குற்றம் சுமத்தும்போது, அக்குழந்தைகளே அவற்றை நம்பத் தொடங்கி விடுகிறார்கள். அதாவது, ‘ஓஹ்...தான் இப்படித்தான், தன் புத்தி இப்படித்தான்!’ என்பதாக.

தனக்குப் படிப்பே வராது என்று சுயப் பிரகடனம் செய்துகொள்ளும் ஒரு சிறுவனைப் பார்த்து, 'எதற்காக அப்படிச் சொல்கிறாய்?' என்று கேட்டால், 'ஆமாம்...அப்படித்தான்' என்பான். அவனிடம், 'நீ நன்றாக கணக்குப் போடுகிறாய்!' என்றால், 'ஐயோ! நானா, கணக்கா? என்று ஆச்சர்யப்படுவான். உண்மையில் பார்த்தால், நாம் அனைவரும் மனக்கணக்குப்

போடக்கூடியவர்களே! அப்படித்தான் நம் அனைவருடைய வாழ்க்கையும் அமைந்துள்ளது.

தவறு நடக்கும் சூழல் வரை, குழந்தைகளை கொண்டுபோய் விட்டுவிட்டு, பிறகு அதிலிருந்து அவர்களை திருத்தி மாற்ற முயல்வது மிகவும் கடினமான ஒன்று. வருமுன் காப்பதே சிறந்தது!

**9.** **<u>கேள்வி:</u>** மிகவும் உணர்வுப்பூர்வமாக பேசப்படும் ஒரு விஷயம் 'சிறார் குற்றவாளிகள்'. உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் பல்லாண்டுகளாகவே அத்துறையில் இருக்கிறீர்கள். இது உண்மையிலேயே மாறியிருக்கிறதா? அல்லது ஒரு மிகைப்படுத்தப்பட்ட நிலையினால் இதைக் கேட்கிறோமா? இதில் என்னவிதமான மாற்றங்கள் உள்ளதாக நினைக்கிறீர்கள்?

**<u>பதில்:</u>** இப்போதைய நிலைமையில் பார்க்கும்போது, சிறார் குற்றவாளிகளின் மேல், சமூகத்திற்கு, காழ்ப்புணர்ச்சியும் கோபமும் அதிகமாகியுள்ளது என்பதே உண்மை. சிறார் குற்றவாளிகள் என்பதற்கான வயது வரையறை முன்பெல்லாம் 14 என்பதாக இருந்தது. ஆனால், அது இப்போது கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, 18 வயது என்ற வகையில் வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. 16 முதல்

18 வயதுக்குள் உள்ளவர்கள் அதிக குற்றங்களைப் புரியும் நிலை உள்ளது. அதேசமயம், அந்தக் குறிப்பிட்ட வயது காலகட்டத்தில் குற்றம் செய்பவர்களை, வாழ்க்கை முழுவதும் சிறையில் அடைத்து, அவர்களின் வாழ்வை சீரழித்து விடக்கூடாது என்பது மிக முக்கியமான ஒன்று. அவர்களை சீர்திருத்துவதற்கான வழியை நாம் கண்டிப்பாக கண்டடைய வேண்டும். இத்தகைய இளம் குற்றவாளிகளின் பின்னணியை நோக்கினால், அவர்கள், ஏதோ அப்போது நிகழ்ந்த ஒன்றால் திடீர் குற்றவாளிகள் ஆகிவிடவில்லை. அவர்கள் இன்னும் சிறுவயதாக இருக்கையில், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பழிவாங்கும் நோக்கிலேயே, இந்த சமூகத்தின் மீதுள்ள தமது வன்மத்தை தணித்துக்கொள்ளும் விதத்திலேயே, அத்தகைய குற்றங்கள் அமைகின்றன.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், அத்தகையவர்களை இந்த சமூகம் சீர்திருத்தி, மன்னித்து ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பது மிக முக்கியம். சிங்கப்பூர் போன்ற நாடுகளில், இத்தகைய சீர்திருத்த முயற்சிகள் அதிகம் செய்யப்படுகின்றன. ஏனெனில், ஒரு இளம் குற்றவாளியை வெறுமனே சிறையில் அடைத்துவிட்டால் மட்டுமே, அவன் திருந்தி விடுவான் என்று நினைப்பது தவறு. சீர்திருத்தம் என்பதை அடைக்கப்பட்ட ஒரு சூழலில் வழங்கிவிட முடியாது. வேறுவழியே இன்றி, அந்த இளம்

குற்றவாளியை வெளியேவிட்டால், வேறு சமூக விரோதிகள் அவனை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற நிலை இருந்தால் மட்டுமே, நீடித்த சிறப்பு இல்ல கவனிப்பு தேவைப்படலாம். இந்த சமூகத்தின் கண்ணோட்டம் நிறைய மாற வேண்டும் மற்றும் பல ஆதரவு அமைப்புகள் உருவாக வேண்டும். நடத்தை மாற்றங்களை செய்து கொள்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

**10. <u>கேள்வி:</u>** இளம் குற்றவாளி குழந்தைகளிடம் இருக்கக்கூடிய எண்ண ஓட்டங்களில், ‘இனிமேல் எனக்கு சிறப்பான எதிர்காலம் கிடையாது’ என்று நினைத்துக் கொள்வது மற்றும் ‘நான் தீர்மானித்த எதிர்காலம் எனக்கு கிடைக்கவில்லை’ என்று எண்ணிக் கொள்வது போன்றவை மிக முக்கியமானவை. உங்கள் அனுபவத்தில், இதுபோன்ற குழந்தைகளை நீங்கள் அதிகம் சந்தித்திருப்பீர்கள். இத்தகையோருக்கான ஒரு பொதுவான சமூக சந்திப்பு தளம் எதுவும் உள்ளதா?

**<u>பதில்:</u>** உண்மையை சொல்லப்போனால், இத்தகையக் குழந்தைகள் அதிகம் பேருக்கு, சரியான வாழ்வை அமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புகளை நாங்கள் கடந்த காலத்தில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். பலருக்கு திருமணமும் செய்து வைத்துள்ளோம். பலருக்கு

சிறுதொழில் பயிற்சிகளையும் அளித்துள்ளோம். அதேசமயம், அவர்களின் மனதில் விழுந்த அந்த ஒட்டையை (தான் இந்த சமூகத்திலிருந்து தூக்கி வீசப்பட்டவன் என்ற) அடைப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல! பல வெளிநாடுகளில் இதுதொடர்பாக பல ஆய்வுகளும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளன. அத்தகைய ஆய்வு முடிவுகள் அனைத்தும், 'அந்த பாதிக்கப்பட்ட இளம் வயதினருக்கு, அவர்களுடைய சிறுவயதில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகள்தான் காரணம்' என்ற முடிவையே பிரதிபலிக்கின்றன. அதனடிப்படையில், சீர்திருத்தம் தொடர்பான அவர்களின் ஆய்வு முடிவுகள் சொல்வது என்னவெனில், குழந்தைகளின் முதல் 3 வயதிற்குள், அவர்களுடைய வாழ்வில் தொடர்புடைய நபர்களுக்கு போதிய விழிப்புணர்வை ஊட்டி, சூழலை சரியாக அமைத்துவிட்டால், சிறார்களால் நிகழும் குற்றங்கள், 50% முதல் 70% வரை குறைகிறது என்பதே.

***(நிறைவு)***

நேர்காணலின் காணொளி காட்சிக்கு:
https://www.youtube.com/watch?v=sz53nTaaU10&fbclid=IwAR3nRqqZCEOdsRIeEasVEX7E7IXdnX9LJJZzQv96otYPR-_VHvjt8u9Gmmk